**நுவரஎலிய மாநகர சபை**

**நுவரஎலிய மாவட்டம்**

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஜூலை 02 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஜூன் 02 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 Mf];l; 05 திகதி மா நகர சபையின் ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, நுவரஎலிய மாநகர சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) காசுப் பாய்ச்சல் கூற்றில் களியாட்ட வரி பெறுவனவுகள் ரூபா 751,387 இனை ரூபா 25,000 தொகை என காட்டப்பட்டுள்ளது.

(ஆ) 2011 முதல் 2014 வரை பரிசுகள் மற்றும் உதவி நிதிகள் ஆக கிடைத்திருந்த ரூபா 579,678 இற்கான தொகை திருப்பி செலுத்த வேண்டிய வைப்புக்கள் என 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமை கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

(இ) பொறியும் பொறித்தொகுதியும் 2012 ஆண்டின் ஆரம்ப மீதி ரூபா 81,000 இனால் மிகையாகப் பதியப்பட்டிருத்தல் மற்றும் கொள்வனவுகளின் பெறுமதி ரூபா 350,745 இனால் மிகையாகவ்பு பதிவு செய்தல் என்பன மீளாய்வாண்டின் போது கணக்குகளில் திருத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2013 ஆண்டின் போது ஏல விற்பனவில் விற்பனவு செய்யப்பட்ட ரூபா 1,063,193 பெறுமதியான பண்டங்களை இனங்கண்டு அவற்றின் பெறுமதியை பதிவேடுகளில் மற்றும் சொத்துக் கணக்குகளில் இருந்து அகற்றப்படாமல் ஏலவிற்பனவு மூலம் கிடைத்திருந்த பணத்தை மாத்திரம் சொத்துக்களில் இருந்து குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்படும் ரூபா 992,624 தொகை பெறுமதியான 9 நடமாடும் மலசலகூடங்கள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---------------------------------------------------------------------------------------

05 கணக்கு விடயங்கள் தொடர்பாக குறிப்பிட்ட கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் கூட்டுத்தொகை ரூபா 66,735,935 ஆக காணப்பட்டதுடன் துணைப்பதிவேடுகளின் பிரகாரம் அக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 66,568,903 ஆக காணப்பட்டமையால் ரூபா 167,032 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

----------------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகள் 02 இன் கூட்டுத்தொகை ரூபா 17,806,983 ஆக காணப்பட்டதுடன் அவற்றின் 01 வருட காலத்தை மிகைத்துள்ள கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,289,707 ஆக காணப்பட்டது.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

----------------------------------------------------------------

முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்கள் என காட்டப்பட்டிருந்த ரூபா 88,237,628 தொகை பெறுமதியினை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| i. நி.பி. 343 | 2010 ஆண்டு முதல் 2014 வரை 09 சந்தர்ப்பங்களில் 08 அலுவலர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட 09 பற்றுச் சீட்டுப் புத்தகங்கள் திருப்பி ஒப்படைத்திருக்கவில்லை. |
| ii. நி.பி. 371 | 02 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொடுத்திருந்த ரூபா 49,472 இற்கான முற்பணங்களைத் தீர்த்திருக்கவில்லை. |
| iii. நி.பி. 395 | 2014 ஜனவரி முதல் திசெம்பர் வரை வங்கி இணக்கக் கூற்றுக்கள் 2015 ஜூலை வரையும் தயாரித்திருக்கவில்லை. |
| iv. நி.பி. 571 | 07 சந்தர்ப்பங்களில் வைப்புச் செய்யப்பட்ட 02 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 269,674 பெறுமதியான வைப்புக்களை உரிமையளிப்பு செய்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| v. | நி.பி. 757(ஆ) | வருடாந்த பண்டக் கணிப்பிட்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பித்திருக்கவில்லை. |
| (ஆ) | 2006 அரச கொள்வனவு வழிகாட்டல் கோவை | தன்னார்வ அமைப்புக்களுக்கு ஒப்பந்தங்கள் வழங்கும் போது ஒரே தடவை சங்கம் ஒன்றிற்கு வழங்கக்கூடிய வேலைகளின் எண்ணிக்கை 03 மற்றும் அவற்றின் பெறுமதி ரூபா 02 மில்லியனை மிகைக்கக் கூடாது என நிபந்தனைக்கு முரணான ரூபா 04 மில்லியன் பெறுமதியான 05 நிர்மாண வேலைகள் சங்கம் ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. |
| (இ) | இலங்கை குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் XXIV பிரிவு 40 | சேவையை விட்டுச் சென்றுள்ள 04 அலுவலர்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 461,623 இற்கான தொகையின் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஈ) i. | பொது நிருவாகச் சுற்று நிருபம் 2007 மே 05 திகதிய இலக்கம் 09/2007 கொண்ட சுற்றுநிருபம் | ஒப்பந்த அடிப்படையில் ஆட் சேர்க்கப்பட்ட ஓய்வு பெற்ற இரண்டு அலுவலர்களுக்கு சுற்று நிருப ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் மீளாய்வாண்டின் போது ரூபா 180,000 இற்கான தொகை ஒன்று சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. |
| ii. | 2014 திசெம்பர் 11 திகதிய 25/2014 இலக்கம் கொண்ட சுற்றுநிருபம் | சேவைக் காலம் 180 நாட்கள் காணப்பட்ட 31 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. |

2 நிதி மீளாய்வு

----------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 90,844,015 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 104,745,247 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 13,901,282 இற்கான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

---------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான மிகை முன்னைய ஆண்டின் மிகையுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 13,901,282 இற்கான குறைவடைதல் ஒன்று அவதானிக்கப்பட்டதுடன் அதற்காக 02 வருமான விடயங்களில் குறைவடைதல் மற்றும் 05 செலவு விடயங்கள் அதிகரித்தல் அடிப்படைக் காரணமாகியுள்ளது.

i. சபையின் சம்பளங்கள் மற்றும் வேதனங்களின் செலவு ரூபா 26,064,347 இனால் அதிகரிக்கும் போது சம்பள மீளளிப்பு ரூபா 12,422,122 இனால் குறைவடைதலுக்கு நிதி விளைவுகள் ரூபா 36,486,469 இனால் குறைவடைதல் காரணமாகியுள்ளது.

ii. வாடகை வருமானம் ரூபா 50,117,700 இனால் வழமையல்லாத விதமாக அதிகரிப்பதற்கு நவீன கடைக் கட்டடத்தொகுதியை வாடகைக்கு கொடுக்கும் போது பெற்றுள்ள ரூபா 41,225,000 இற்கான கேள்வித் தொகை காரணமாகியுள்ளது.

2.3 வருமான நிருவாகம்

--------------------------------

2.3.1 வருமானம் சேகரித்தலில் செயலாற்றுகை

----------------------------------------------------------------

நகர பிதாவினால் மீளாய்வாண்டு தொடர்பாக சமர்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு,

| வருமான விடயம் | 2014.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவை | 2014 ஆண்டின் போது பில் போடப் பட்டவை | பெற வேண்டிய மொத்த தொகை | ஆண்டிற்கான அறவீடுகள் பில் போடப்பட்ட வைகளில் | நிலுவைகளில் | 2014.12.31 திகதியில் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரி | 61,758,084 | 38,377,645 | 100,135,729 | 18,316,200 | 18,650,658 | 63,168,871 |
| வாடகை | 426,500 | 32,552,336 | 32,978,836 | 17,832,646 | 10,449,745 | 4,696,445 |
| அனுமதிப் பத்திர கட்டணம் | 852,500 | 12,252,966 | 13,105,466 | 12,244,966 | 17,000 | 843,500 |
| நீர்க் கட்டணம் | 18,633,351 | 39,378,549 | 58,011,900 | 26,342,961 | 10,961,250 | 20,707,689 |

2.3.2 வீதவரி

-----------

(அ) சபையினால் 07 வருடங்களுக்கு மிகையான காலம் வீதவரிக்காக பெறுமதி மதிப்பீடு செய்திருக்கவில்லை. அத்துடன், அதன் காரணமாக 101 அறைகளைக் கொண்ட சுற்றுலா ஹோட்டல் உட்பட கணிசமான எண்ணிக்கையான ஆதனங்களில் இருந்து வீதவரி அறவிடப்படவில்லை என கணக்காய்வு தெரிவு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஒரு ஆதனத்தில் இருந்து ரூபா 100,000 இனை விட மிகைத்த நிலுவை வீதவரி அறவிடப்பட வேண்டிய 44 ஆதனங்கள் காணப்பட்ட போதிலும் அந் நிலுவை தொகையை அறவீடு செய்தவதற்காக சட்டரீதியான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) பொதுக் கூட்டத்தில் பிரேரணை ஆமோதித்தல் மேற்கொள்ளப்படாமல் வருமான பரிசோதனைகளின் விதப்புரை மற்றும் கணக்காளரின் அங்கீகாரத்துடன் சுற்றுலா ஹோட்டல் ஒன்றில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 73,320 இற்கான எழுத்தானை கட்டணத்தை பதிவழிக்கப்பட்டிருந்தது.

2.3.3 காணி வாடகை

------------------------

சபையின் பதிவேடுகளின் பிரகாரம் 178 காணித் துண்டுகள் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. அத்துடன் வாடகை உடன்படிக்கை மற்றும் நிபந்தனைகளின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அவற்றில் 170 துண்டுகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய வாடகை ரூபா 15,396,722 ஆகும். இந்த நிலுவை வாடகை 02 முதல் 20 வருடங்களை மிகைத்த காலத்தை சேர்ந்தவையாக காணப்பட்டதுடன், 10 வருடங்களுக்கு மிகையான காலமாக காணியை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு வரியினை திருத்தி இருக்கவில்லை.

2.3.4 கடை வாடகை

-----------------------

i. சபைக்குச் சொந்தமான 463 கடைகளின் வாடகை 2009 ஆண்டு பெறுமதி மதிப்பீடு செய்யாமல் சபை தீர்மானத்தின் பிரகாரம் முன்னர் அறவிடப்பட்ட வாடகைக்கு நூற்றிற்கு 25 இனை சேர்த்து அறவிடப்பட்டுள்ளமையால் சபைக்கு கிடைக்க வேண்டிய பாரிய வருமானம் ஒன்றினை சபை இழந்துள்ளது.

ii. உடன்படிக்கையின் பிரகாரம் கடை வாடகை அறவிடப்படாமையால் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 31,788,478 இற்கான நிலுவை கடை வாடகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

2.3.5 விளம்பர அறிவித்தல் பலகை கட்டணம்

---------------------------------------------------------------

சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள துணை விதிகளின் பிரகாரம் 2014 ஆண்டு முதல் ஏப்ரல் வரை சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 190 விளம்பர அறிவித்தல் பலகைகளில் இருந்து ரூபா 3,482,312 இற்கான தொகை ஒன்று அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.3.6 நீதிமன்ற தண்டப்பண மற்றும் முத்திரைக் கட்டணம்

---------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டியிருந்த தொகைகள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளன.

| | ரூபா |
|---|---|
| | -------- |
| நீதிமன்றத் தண்டப்பணம் | 318,038 |
| முத்திரைக் கட்டணம் | 12,976,421 |
| | -------------- |
| மொத்தம் | 13,294,459 |
| | ======= |

3 செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

3.1 செயலாற்றுகை மதிப்பீடு

-------------------------------------

வருடாந்த செயற்பாட்டு திட்டத்திற்கு இணங்கியின்மையை உறுதிப்படுத்துவதற்காக பௌதீக மற்றும் நிதி செயலாற்றுகையை காட்டும் முன்னேற்ற அறிக்கை மற்றும் நிருவாக அறிக்கை என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 செயற்பாட்டு திறமையின்மை

---------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தனியார் முதலீட்டார் ஒருவரினால் 2011 ஆண்டு முதல் கிரகெரி பூங்காவில் நடாத்தப்பட்டுவந்த துவிச்சக்கர வண்டிகள் வாடகைக்கு வழங்கும் செயற்திட்டத்தின் மூலம் மொத்தமாக ஆண்டிற்கு சுமார் ரூபா 2,000,000 தொகை வருமானம் ஒன்றினை உழைத்திருந்தது எனினும் 2014 ஆம் ஆண்டின் போது கொள்வனவு நடைமுறையில் பெற வேண்டிய வருமானத்தில் 100% செயலாற்றுகை காப்புறுதி வேண்டியமையால் குறிப்பிட்ட முதலிட்டாளர் செயற்திட்டத்தை கைவிட்டிருந்ததுடன் சபைக்கு பாரிய நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) நுவரஎலிய மாநகர சபையின் புதிய அலுவலக தொடர் கட்டடத்திற்கு அண்மையில் ரூபா 5,922,189 தொகை ஒன்று செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட 16 கடைகளின் நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்பட்டு 2013 செப்டம்பர் 16 ஆந் திகதி சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அக்கடைகளை கூறுவிலை கோரல் மேற்கொள்ளப்படுவதன் மூலம் வாடகைக்கு கொடுப்பதற்கு 2014 திசெம்பர் 31 திகதி வரையும் நடவடிக்கை ஒன்று எடுத்திருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான PB-8678 இலக்கம் கொண்ட கப் வண்டி திருத்த வேலைக்காக ரூபா 715,446 தொகை ஒன்றினை உற்பத்தி நிறுவனத்திற்கு செலுத்தி ஒரு வருடமும் 04 மாதங்கள் கடந்திருந்த போதிலும் வாகனத்தை திருத்த ஒப்படைத்திருக்கவில்லை.

3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

----------------------------------------------

3.3.1 களஞ்சியக் கட்டுப்பாடு

-----------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. களஞ்சிய பெறுவனவுகள் / வழங்கல் தொடர்பாக பேரேடு ஒன்று தனிப்பட்ட முறையில் அலுவலர் ஒருவரினால் கணக்குப் பகுதியில் பேணப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அனைத்து பெறுவனவுகள் மற்றும் வழங்கல்கள் களஞ்சிய பொறுப்பாளரினால் களஞ்சிய பேரேட்டில் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தமையால் களஞ்சிய கட்டுப்பாடு தொடர்பான அகக்கட்டுப்பாடு வீழ்ச்சி அடைந்திருந்தது.

ii. 2011 ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 448,500 பெறுமதியான 230 மழை மேற்சட்டைகள் மற்றும் அவ்வாண்டின் போது கிரகரிக் குளம் அலங்கரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட ரூபா 744,750 பெறுமதியான 135 மின் குமிழிகள் எதுவித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டது.

iii. நுவரஎலிய மாநகர சபையின் தாய்மார் பிணி ஆய்வு நிலையத்திற்காக சுகாதார திணைக்களத்தில் இருந்து கிடைத்திருந்த இரும்பு போலேட் மருந்து 178,000 வில்லைகள் மீளாய்வாண்டின் போது காலவதியாகியிருந்தன.

iv. களஞ்சியப் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 50,000 பெறுமதியான 4’ X 8’ அளவான “செப்டிரீக்” இன நீர்த் தொட்டி ஒன்று நுவரஎலிய தேர்தல் அலுவலகத்திற்கு வழங்கியதாக களஞ்சியப் பொறுப்பாளர் குறிப்பிட்டிருந்த போதும் அதற்காக பணம் அல்லது பெறுவனவு கட்டளை பெற்றிருக்கவில்லை.

v. வருடாந்த பண்டக கணிப்பீடு அறிக்கைகள் சமர்பிக்கப்பட்டமையால் ரூபா 17,170,750 பெறுமதியான பொதுக் களஞ்சிய மீதியை திருப்திகரமாக உண்மைப்படுத்துவதற்கு கணக்காய்வின் போது முடியாதிருந்தது.

3.3.2 ஒப்பந்த நிருவாகம்

-----------------------------

(அ) மகநெகும செயற்திட்டத்தின் கீழ் 05 பாதைகளுக்காக இணைத் தொடர்பு கொங்கிரீட் அச்சு கற்கள் பரப்புவதற்காக கிடைத்திருந்த ரூபா 4,000,000 இற்கான ஏற்பாடுகளில் இருந்து நிர்மாண வேலைக்காக 66,400 அச்சுக் கற்கள் பரப்ப வேண்டியிருந்த நிபந்தனை ஒன்று விதிக்கப்பட்டிருந்தது. எனினும் சபை அதனை கவனத்தில் எடுக்காமல் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 41,253 அச்சுக் கற்கள் பரப்பப்பட்டமையால் ரூபா 868,968 தொகை ஒன்றினை சபை இழந்துள்ளது.

(ஆ) கொல்ப் வீவ் வர்த்தக தொடர் கட்டடம் நிர்மாணிப்பதற்காக ஆரம்ப வரைபு மற்றும் மதிப்பீட்டுக்காக உசாத்துணை நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 3,000,000 தொகை ஒன்று செலுத்தப்பட்டு 09 வருட காலம் கடந்திருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை அவ் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

3.3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

------------------------------------------------------------------------------------------

கீழ் விவரிக்கப்பட்டுள்ள வாகனங்ள் மற்றும் சொத்துக்கள் 05 வருடங்களை மிகைத்த காலம் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது.

| விபரம் | பயன்படுத்தப்படாதிருந்த காலம் |
|---|---|
| 27 ஸ்ரீ 4934 கொண்ட லொறி வண்டி | 10 வருடங்களை மிகைத்த காலம் |
| 04 சில்லு கொண்ட 03 டிரக்கர் வண்டிகள் | 05 வருடங்களை மிகைத்த காலம் |
| துவிச் சக்கர வண்டிகள் 04 | 10 வருடங்களை மிகைத்த காலம் |
| தண்ணீர் பவுசர்கள் 03 | 10 வருடங்களை மிகைத்த காலம் |
| மின் டிரான்ஸ்போமர் 04 | 10 வருடங்களை மிகைத்த காலம் |
| முன்பள்ளி உபகரணப் பகுதிகள் | 05 வருடங்களை மிகைத்த காலம் |
| பீவீஸீ பென்ட் (மி.மி. 225 மிகை) | 10 வருடங்களை மிகைத்த காலம் |

3.3.4 இனங் காணப்பட்ட நட்டங்கள்

-----------------------------------------------

2014 ஆண்டு ஏப்ரல் முதல் ஜூலை வரை கிரகரி பூங்காவில் துவிச்சக்கர வண்டி வாடகை அறவிடுவதற்கு அச்சிடப்பட்ட 07 புத்தகங்களில் 368 அனுமதிப்பத்திரங்களுக்காக சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 36,800 இற்கான தொகையொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை.

3.3.5 சட்டச் செலவுகள்

---------------------------

உப நகர பிதா விடுமுறை அனுமதிக்கப்பட்டு 03 சபை கூட்டங்களில் கலந்து கொள்ளாமையால் பதவியில் இருந்து அகற்றுவதற்காக எடுக்கப்பட்ட தீர்மானத்திற்குச் சவாலாக உப நகர பிதாவினால், நகர பிதாவுக்கு மற்றும் சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒன்று தொடர்பாக விவரங்கள் சமர்ப்பிப்பதற்காக சட்டவினைஞர் கட்டணம் என ரூபா 1,680,500 இற்கான தொகையொன்று சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டுள்ளது.

4 கணக்களி பொறுப்பும் நல்லாட்சியும்

----------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

--------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான அங்கீகரிக்கப்பட்டுள்ள பாதீட்டின் ஏற்பாடுகளின் வரையறையினை மிகைத்து வழங்கல்கள் மற்றும் உபகரணங்கள் தலைப்பில் ரூபா 24,018,423 இற்கான செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதற்காக முறையான அங்கீகாரம் ஒன்று பெற்றிருக்கவில்லை.

(ஆ) 06 வருமானத் தலைப்புக்களை சேர்ந்த 17 உப விடயங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,440,000 இற்கான வருமானங்களில் அறவீடு செய்யப்படும் சதவீதம் 0% ஆக காணப்பட்டது.

(இ) பாதீடு செய்யப்பட்ட 03 வருமானத் தலைப்புக்களை சேர்ந்த உப வரவு விடங்கள் 04 இல் 79% முதல் 97% வரையான வீச்சில் இலக்கு வருமானத்தை உழைப்பதற்கு முடியாதிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவுகள் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 05 வருமான விடயங்களில் நூற்றிற்கு 17 முதல் நூற்றிற்கு 86 வரையும், 05 செலவு விடயங்களில் நூற்றிற்கு 10 முதல் நூற்றிற்கு 60 வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயன்தறு கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.2 தீர்க்கப்படாதிருந்த மற்றும் பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

------------------------------------------------------------------------------------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதி வரை 15 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அனுப்பியிருக்கவில்லை. அத்துடன் அவற்றின் கணக்கிடக்கூடிய பெறுமதி ரூபா 52,805,747 ஆகும்.

4.3 கொள்வனவுத் திட்டம்

----------------------------------

சபையின் கொள்வனவு மற்றும் நிர்மாண வேலைகள் தொடர்பாக கொள்வனவுத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

4.4 கணக்காய்வுகளும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடத்தலும்

----------------------------------------------------------------------------------------------------

நிறுவனத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைத்திருக்கவில்லை.

4.5 அகக் கணக்காய்வு

------------------------------

நிறுவனத்தில் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

--------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) வருமான நிருவாகம்

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) கடன் பட்டோர் கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு

(ஈ) சொத்துக்கள் நிருவாகம்

(உ) இருப்புக் கட்டுப்பாடு